# திருக்கண்ணபுரம்

(ஸ்ரீ உ. வே. திருக்கண்ணபுரம் T. S. ராஜகோபால ஐயங்கார், B.A., L.T ,

"யாவரும் வந்தடி வணங்க அரங்கநகர்த்
துயின்றவனே!
காவிரிநல் நதிபாயுங் கணபுரத்தென்
கருமணியே!"

என்பதற்கிணங்க ஸ்ரீரங்கம் மேலைவீடு என்றும், திருக்கண்ணபுரம் கீழைவீடு என்றும் பூர்வர்கள் வழங்கிவந்துள்ளனர். ஸ்ரீ மணவாள மாமுனிகள் இந்தத் திவ்ய தேசத்தில் ஒரு வருஷ காலம் எழுந்தருளி யிருந்தார் என்று கருதப்படுகிறது; ஏற்கனவே நிலவிவந்த ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா அவர் காலத்தில் மேலும் வளர்ந்துள்ளது. நைமிசாரண்ய வாஸிகளான மஹரிஷிகள் திருக்கண்ணபுரம் அஷ்டாக்ஷர ஸித்தி க்ஷேத்ரம் என்று பெருகும் ஆதரத்தில் இங்குத் தவஞ்செய்து வந்தனர். ஆகையினால் இருவகையிலும் மேன்மை கொண்டதாயிற்று இந்த ஸ்தலம். ஸ்ரீரங்கத்தில் நடக்கும் அநுஷ்டானமே பெரும்பாலும் இந்தத் திவ்ய தேசத்திலும் இன்றும் நடந்துவருகின்றது.

இந்த ஸந்நிதியில் தீர்த்த மரியாதைக் குரியவர்கள் வரிசைப்படி (1) திருமாலை யாண்டார், (2) எச்சான் (வாரிசு இல்லை), (3) கூர குலோத்தம தாஸர், (4) ஜீயர்கள், (5) ஸ்ரீ வைஷ்ணவாள் - சௌந்தரராஜ பட்டர் (சமதீர்த்தம்), (6) நலந்திகழ் நாராயண தாஸர்-இவரது மரபினர். இந்த ஸ்தலத்தில் வாழும் தென்கலை ஸ்ரீ வைஷ்ணவர்கள் அத்யாபக கைங்கர்யத்தில் அந்வயிக்கும் அதிகாரம் வாய்ந்தவர்கள்.

"நீலாத்ரிமிவ திஷ்டந்தம்"

மூலவர் நீலமேகப் பெருமாள்—"கருவரைபோல் நின்றானை" இவை அநுஸந்தேயம். உத்ஸவமூர்த்தி ஸ்ரீ சௌரிராஜப் பெருமாள்; பக்கத்தில் ஸ்ரீ தேவி, பூதேவி இவர்களுடன் பத்மினிப் பிராட்டியும் ஆண்டாளும் எழுந்தருளியிருக்கின்றனர். த்வஜாரோகணத்தன்று இரவு, சூர்ணோத்ஸவம், ரதோத்ஸவம், திருப்பள்ளியோடம் இந்நாட்களில் நான்கு நாச்சிமாருடன் பெருமாளுக்குப் புறப்பாடு. பெரும்பாலும் பெருமாளுக்குத் தனியாகவே புறப்பாடு. காலைப் புறப்பாடுகளில் திருமேனியில் வெய்யில்படாத வண்ணம் திருப்பல்லக்கில் திரைமறைப்பு அமைந்துள்ளது.

நித்யோத்ஸவங்கள்:

தினம் காலையில் விச்வரூபம், ஸுப்ர பாதம், காலை ஸந்நிதியில் திருப்பாவை ஸேவை, உச்சிக்காலம்; மாலையில் திருமால் வடை, இரண்டாம் காலம். அர்த்த ஜாமம். சாயங்காலம் நித்யாநுஸந்தான ஸேவாக்ரமம்: (1) திருப்பல்லாண்டு, உன்னையுமொக்கலையில் என்ற பாசுரம், பூச்சூடல், காப்பிடல், சென்னியோங்கு, காட்டில் வேங்கடம் என்ற பாசுரம் மன்னுபுகழ், அமலனாதிபிரான், கண்ணி நுண்சிறுத்தாம்பு, பெரிய திருமொழியில் நாளொன்றுக்கு ஒரு பதிகம் (வரிசைக் கிரமமாக), உலகமுண்ட, கங்குலும் பகலும், ஆழியெழ, மாலை நண்ணி தொடர்ந்தே சாற்றுமறை - "(இன்னுமொரு நூற்றாண்டிரும் வரையில்)- ஸேவை நான்கு பாதங்களும். இரவில் அர்த்த ஜாமத்தில் "மன்னுபுகழ்"

பஞ்சபர்வப் புறப்பாடுகள் :

ஏகாதசி 2 நாள், மாஸப்பிறப்பு,

அமாவாஸை, ஹஸ்தம் இந்த நாட்களில் ஸ்ரீ சௌரிப் பெருமாளுக்கு ப்ராகாரத்தில் புறப்பாடு. ஆழ்வார்கள் ஸந்நிதிக்கு எதிரில் பெரிய திருமொழிஸேவை தொடக்கம். நித்யாநுஸந்தானத்தில் ஸேவிப்பதைத் தொடர்ந்து ஒவ்வொருநாள் புறப்பாட்டிலும் ஒரு திருமொழி (திருப்பதிகம்), ஜீயர் மண்டபத்தில் பத்தி உலா இந்த ஸேவையுடன் நடக்கும். ஸேவை முடிந்ததும் பத்தி உலா தொடர்ந்து நடக்கும். பத்தி உலா மூன்றுவது சுற்றில் முனையதரையருக்கு ஸ்ரீ சடகோபம் ஸாதிப்பது வழக்கம்.

ஸ்ரீகண்ணபுரத் தாயாருக்கு வெள்ளிக் கிழமை தோறும் புறப்பாடு. ஆழ்வார்கள் ஸந்நிதியில் நாச்சியார் திருமொழி தொடங்கி, ஒவ்வொரு புறப்பாட்டிலும் வரிசையாக ஒரு திருமொழி (திருப்பதிகம்) ஸேவை நடக்கும்.

அமாவாசையன்று நடுப்பகலில் ஸ்ரீ சௌரிராஜப் பெருமாள் திருக் கைத்தலத்தில் ஸ்ரீ ராமன் ஸந்நிதி வரையில் எழுந்தருளி, ஸ்ரீ விபீஷணாழ்வானுக்கு ஸ்ரீ சடகோபன் மாலை மர்யாதை ப்ரஸாதித்து ஆஸ்தானத்திற்கு எழுந்தருள்வர்.

விசேஷ உத்ஸவங்கள்:

(1) மாசி ப்ரஹ்மோத்ஸவம் (மக உத்ஸவம் என்று வ்யவஹாரம்)–த்வஜாரோகணத்துடன், ஒன்பதாம் உத்ஸவம் தீர்த்தவாரி- பௌர்ணமியில் திருமலைராஜன் பட்டினத்தில் ஸமுத்திரத்தில்.

திருவீதிகளில் ஸேவை :

முதல் ஆறு நாட்களில் இரண்டு வேளைகளிலும் இயற்பா (பெரிய திருவந்தாதி முடிய). ஏழாவது உத்ஸவம் காலையில் திருத்தேர்; திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் ஸேவை ஆனபிறகு பெரிய திருமொழி தொடக்கம். இரவு திருச்சந்த விருத்தம், பின்பு தொடர்ந்து பெரிய திருமொழி. எட்டாம் உத்ஸவம் இரவோடு திருமொழி ஸேவை முடியும்.

பெருமாள் ஸமுத்ரத்திற்கு எழுந்தருளும்போது வடக்கு வீதியிலுள்ள சிலம்பொன்னுழி என்ற புஷ்கரிணிக் கரையில், கோஷ்டியினர் சிலையிலங்கு பொன்னுழி என்ற திருப்பதிகம் ஸேவிக்க, பெருமாள் பல்லக்கிலிருந்தவாறே மூன்று முறை குதூகலம் தோன்றச் சுற்றிப் பின்பு திருமலைராஜன் பட்டினம் நோக்கி எழுந்தருள்வர்-ஸமுத்ரக்கரையில் நிலையிடமெங்குமின்றி என்ற திருமொழி முன்பு நெடுங்காலமாக ஸேவித்து வந்துள்ளனர்.

ஸப்தாவரண உத்ஸவத்தில் திருமஞ்சனத்திற்குப் பிறகு திருவாராதனத்தில் கோயில் திருவாய் மொழி, இராமாநுச நூற்றந்தாதி ஸேவை; இரண்டாங் காலத்தில் சாற்றுமறை. திரு[illegible]ல் இராமாநுச நூற்றந்தாதி ஸேவை; தேர்முட்டியிலிருந்து மேள வாத்யமில்லாமல், சிறிய மேளத்துடன் (முகவீணையுடன்) பெருமாள் எழுந்தருள்வர்.

இரண்டு வேளைகளில் புறப்பாட்டின் போது ஸேவை உடையவர் ஸந்நிதியில் தொடங்கி, த்வஜஸ்தம்பத்தடியில் சாற்றுமறை—கடைசிப்பாசுரம் நீங்கலாக. இந்தப் பாசுரம் இயற்சாற்றுடன் பெருமாள் உள்ளே எழுந்தருளியதும் ஆழ்வார்கள் ஸந்நிதியில் ஸேவிக்கப்படும்.

விடாயாற்றி முதல் நாள் உடையவர் ஸந்நிதியில் சிறிய திருமடல் தொடங்கி ஸேவிக்கப்படும்.

(2) வைகாசி பிரஹ்மோத்ஸவம் :

ஒன்பதாவது திருநாள் நித்ய புஷ்கரிணியில் தீர்த்தவாரி. ஸேவாக்ரமம் முன்போல். ஒன்பதாம் உத்ஸவம் தீர்த்தவாரி ஆனபிறகு பெரிய திருமொழி சாற்றுமறை.

விசேஷப் புறப்பாடுகள்: ஏழாவது உத்ஸவம் சாயந்திரம் சூர்ணோத்ஸவம் ஆனபிறகு, இரவில் தாமரைத் திருவாசிச் சப்பரத்திற் புறப்பாடு. பெருமாள் 74 சதுர்யுகம் கண்டவர் என்று கருதப்படுவதால், தாமரைத் திருவாசிக்கு ஆதாரமாகத் தர்ப்பையால் ஆன தரணைகள் 74 திரித்துப் பொருத்துவார்கள். விடியற்காலையில் நெடுங்காலமாக நடந்துவரும் வெள்ளை சாத்திப் புறப்பாடு - சிஷ்யர்கள் ஆதரித்துப் போந்தது. ஸேவை - தனியனில்லாமல் சிறிய திருமடல். எட்டாவது உத்ஸவம் சாயங்காலம் பத்மினித் தாயார் திருக்கல்யாணம்: ஆருவது உத்ஸவம் யானை வாகனத்திற்குப் பிறகு பெருமாள் நாச்சியார் ஸந்நிதிக்கு எழுந்தருளி மாலை மாற்றிய பிறகு பிரகாரத்திற் புறப்பாடு.

(3) விசேஷ உத்ஸவங்கள்:

(1) சித்திரை - வருஷப் பிறப்பு - மாட வீதிப் புறப்பாடு-சிறிய திருமடல் ஸேவை. அக்ஷய த்ருதியை-மாடவீதிப் புறப்பாடு.

(2) சித்திரா பௌர்ணமி - மாட வீதியில் புறப்பாடு - மீன் வேட்டை என்ற கஜேந்த்ர மோக்ஷம்: தேரடியில்

(3) ஆடி-சுக்ல ஏகாதசி-ஜ்யேஷ்டாபிஷேகம் - முடிகொண்டானிலிருந்து திருமஞ்சன தீர்த்தம் எழுந்தருள்வித்து வருவர் ஸ்ரீ வைஷ்ணவர்.

(4) பதினெட்டாம் பெருக்கு-திருப்பல்லக்கில் முடிகொண்டான் ஆற்றுக்குப் பெருமாள் எழுந்தருள்வர்-ஆற்றில் ஸ்ரீ சடாரி தீர்த்தம்.

(5) திருவாடிப் பூரம்-ஐந்து நாள் உத்ஸவம் - தினம் சாயந்திரம் ஆண்டாள் புறப்பாடு ப்ராகாரத்தில் - திருவாய்மொழி ஆயிரமும் ஸேவை. திருவாடிப் பூரத்தன்று முடிகொண்டான் ஆற்றிலிருந்து திருமஞ்சன தீர்த்தம் எழுந்தருள்விப்பது, மத்யானம் ஆண்டாளுக்கு ப்ராராப் புறப்பாடு. பெருமாளுடன் சேர்த்தியில் நாச்சியார் திருமொழி ஸேவை. இரவு பெருமாளுடன் ப்ராகாரத்தில் புறப்பாடு சக்ரவர்த்தித் திருமகன் ஸந்நிதியில் திருவாய்மொழி சாற்றுமறை.

(6) ஆவணிமாதம்—ஸ்ரீ ஜயந்தி—இரவு பெரியாழ்வார் திருமொழி ஸேவை - மறுநாட் காலையில் கண்ணன் திருப்பல்லக்கில் வீதிப் புறப்பாடு-''எண்ணெய் சுண்ணம்'' என்ற பாசுரப்படி வீதியில் எண்ணெய் வழங்குதல்-அன்று சாயந்திரம் உறியடி.

(7) புரட்டாசி—திருப்பவித்ரோத்ஸவம்-5 நாட்கள். இரவு திருவாய்மொழி ஸேவை. ப்ராகாரத்தில் பெருமாள் புறப்பாடு-ஐந்தாவது நாள் பௌர்ணமி - காலையில் பெருமாள் கருடாரூடராய் திருவீதி வலம்வந்து நித்ய புஷ்கரிணியில் தீர்த்தவாரி.

(8) புரட்டாசி—நவராத்ரி. ஸ்ரீகண்ணபுரத்தாயார் ஸந்நிதியில் ஆஸ்தானம்-கொலு.

விஜயதசமி-பெருமாள் குதிரை வாகனத்தில் திருமஞ்சனக் குளத்தங்கரையில் எழுந்தருளி அம்பு போடுதல்.

(9) ஐப்பசி—தீபாவளி உத்ஸவம்.

(10) கார்த்திகை—தீபாரோபண உத்ஸவம்-மடவிளாப் புறப்பாடு.

(11) கைசிக த்வாதசி-கைசிகபுராண படனம்.

(12) மார்கழி—திருப்பாவை ஸேவை.

முதல்நாள்: பெரியஸந்நிதி, நாச்சியார் ஸந்நிதி இவற்றில் திருப்பள்ளியெழுச்சி, திருப்பாவை ஸேவை, மற்றைநாட்களில் பெருமாள் ஸந்நிதியில்தான் ஸேவை. திருப்பாவை சாற்றுமறை நாளன்று நான்கு நாச்சிமாரோடு அர்த்தமண்டபத்தில் எழுந்தருளியிருந்து திருச்செவியேற்பது. கூடாரை வெல்லுஞ்சீர் பாசுரத்தன்று பெருமாள் நான்கு நாச்சிமாருடன் அர்த்தமண்டபத்தில் ஸிம்ஹாஸனத்தில் எழுந்தருளியிருத்தல்.

(13) அத்யயன உத்ஸவம்-முதல்நாள் பெரியாழ்வார் பெருமாள் ஸந்நிதிக்கு எழுந்தருளித் திருப்பல்லாண்டு ஸேவித்தல்-பின்பு அர்த்தமண்டபத்தில் பெருமாள் எழுந்தருளிப் பெரியாழ்வார் திருமொழி ஸேவை.

இந்த உத்ஸவ நாட்களில் ஸேவை தொடங்கியதும் திருக்கண்ணபுரத்தரையருக்குத் தீர்த்த மரியாதை நடக்கும்.

ஸேவாக்ரமம் :

முதல் திருநாள் : பெரியாழ்வார் திருமொழி 1, 2 பத்து.

இரண்டாம் திருநாள்: மேற்படி 3, 4, 5 பத்து சாற்றுமறை: பெரியாழ்வார் பெருமாளைத் திருவடிதொழுதல்.

மூன்றாம் திருநாள் : பெருமாள் நான்கு நாச்சிமாருடன் எழுந்தருளியிருப்பர்-திருப்பாவை, நாச்சியார் திருமொழி.

நான்காம் திருநாள் : பெருமாள் திருமொழி-குலசேகரப் பெருமாள் பெருமாளைத் திருவடிதொழுதல்.

ஐந்தாம் திருநாள் : முதலாயிரம் சாற்றுமறை - மதுரகவியாழ்வார் பெருமாளைத் திருவடிதொழுதல்.

ஆறாம் திருநாள் : பெரிய திருமொழி தொடக்கம். ஸேவை 1, 2 பத்துக்கள்.

ஏழாம் திருநாள் : பெரிய திருமொழி 3, 4 பத்துக்கள்.

எட்டாம் திருநாள்: பெரிய திருமொழி 5, 6 பத்துக்கள்.

ஒன்பதாம் திருநாள்: பெரியதிருமொழி 7, 8 பத்துக்கள்.

சிலையிலங்கு ஸேவித்ததும், ஸேவை நிறுத்தி, திருமங்கையாழ்வாருக்கு நாயகித் திருக்கோலத்தில் தெள்ளியீர் தொடங்கி எட்டாம்பத்து சாத்துமறை.

பத்தாம் திருநாள்: திருமொழி-சாற்றுமறை: திருமங்கையாழ்வார் பெருமாளைத் திருவடி தொழுதல்.

இந்த அத்யயன உத்ஸவம் 21 நாளும் சாற்றுமறையின்போது தீர்த்தவினியோகத்தின்போது கோஷ்டிக்குத் திருத்துழாய் வினியோகம்—தீர்த்தக்காரர் செய்வது.

இராப்பத்து உத்ஸவம் : ஏகாதசியன்று காலையில் பெருமாள் ப்ராகாரப் புறப்பாடு. ஸ்ரீவைகுண்ட வாசல் இல்லாததால் நாச்சியார் ஸந்நிதியை நோக்கிய குறடு வழியாக எழுந்தருள வேதவிண்ணப்பம் கண்டருள்வர். பின்பு நம்மாழ்வார் எதிராக எழுந்தருளியிருக்க, அலங்கார ச்லோக படனம் கேட்டருள்வர். இந்தக் கைங்கர்யம் நெடுங்காலமாகப் பெரிய திருமாளிகை ஸ்வாமிசெய்து வருவது தினந்தோறும் புறப்பாட்டில் இதுமாதிரி அலங்கார ச்லோக படனம் நடந்துவரும்.

ஏகாதசியன்று காலையில் நம்மாழ்வார் பெருமாள் ஸந்நிதிக்கு எழுந்தருளி வேதம் ஸ்ரீபாஷ்யம் முதலியவற்றுடன் திருவாய்மொழி தொடக்கம் நடைபெறும். பின்பு பெருமாள் புறப்பாடு.

ப்ராகாரப் புறப்பாட்டிற்குப் பிறகு பத்தியுலா மண்டபத்தில் (ஜீயர் மண்டபத்தில்) ஆழ்வார் - ஆசாரியர்கள் மங்களாசாஸனத்திற்கு எழுந்தருள, அவர்களுக்குத் திருப்பரிவட்டம், திருமாலை, ஸ்ரீசடகோபம் ப்ரஸாதிப்பர் பெருமாள்.

இரவு வரையில் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் ஸந்நிதியில் எழுந்தருளியிருந்து இரவு திருவாய்மொழி முதல் பத்து திருச்செவி சாற்றுவர்.

அடுத்த ஒன்பது நாள்களிலும் சாயங்கிரம் ப்ராகாரப் புறப்பாடு. பனிமுட்டாக்கு அணிந்து எழுந்தருள்வார். இரவு அர்த்த மண்டபத்தில் திருவாய்மொழி ஸேவை-தினம் ஒரு பத்து.

பத்தாம் திருநாள்-பெரியசாற்றுமறை. இரவு பெருமாளுடன் ஆழ்வார்-ஆசாரியர் புறப்பாடு. பத்தியுலா மண்டபத்தில் இவர்களுக்கு மாலை மரியாதைகள்.

இரவு நம்மாழ்வார் பெருமாளைத் திருவடி தொழுதல்.

இருபத்தோராவது திருநாள்: இயற்பா சாற்றுமறை.

நாச்சியார் அத்யயன உத்ஸவம்

(14) பெருமாள் அத்யயன உத்ஸவத்தைத் தொடர்ந்து நாச்சியாருக்கு அத்யயன உத்ஸவம். தினம் திருவாய்மொழி ஸேவை, அமாவாசையன்று சாற்றுமறை. இதற்கேற்ப இரவு திருவாய்மொழி ஸேவிக்கப்படுகிறது.

ஏகாதசி முதல் நாச்சியாருக்கு ப்ராகாரத்தில் புறப்பாடு.

அமாவாஸையன்று இரவு பெருமாள் நாச்சியார் திருக்கோலத்துடனும், நாச்சியார் பெருமாள் திருக்கோலத்துடனும் ப்ராகாரப் புறப்பாடு. புறப்பாட்டின் போது அலங்கார ச்லோக படனம்.

தாயார் பெருமாள் ஸந்நிதிக்கு எழுந்தருளி ஏகாஸனத்தில் திருவாராதனம். ஒன்பதாம் பத்து மாலை நண்ணி ஸேவையில் சிறப்பு. பின்பு திருவாய்மொழி சாற்றுமறை.

தாயார் பெருமாள் ஸந்நிதியில் சேர்த்தியில் மறுநாள் பகல் முழுதும் எழுந்தருளி விருந்து, பின்பு விடைபெற்றுக்கொண்டு தமது ஸந்நிதிக்கு எழுந்தருள்வர். அன்றிரவு நாச்சியார் ஸந்நிதியில் இயற்பா சாற்றுமறை.

மறுநாள் திருப்பல்லாண்டு தொடக்கம்.

(15) மார்கழி வ்யதிபாதம்: அதிகாலையில் கோஷ்டிக்குத் தீர்த்த விநியோகம் நடக்கும்.

(16) தைமாஸம்-ஸங்க்ரமண உத்ஸவம். இது மிகவும் விசேஷமானது. மாதப்பிறப்பு, முதல், அடுத்த நாள் இவற்றில் புண்ய தீர்த்தங்கள் எல்லாம் நித்ய புஷ்கரிணியில் சேர்ந்து, தங்களிடம் மநுஷ்யர்கழிக்கும் பாவச் சுமை நீங்கப்பெறுகின்றன; மற்றைநாள்களில் அம்சமாக நித்ய புஷ்கரிணியில் அமைந்துள்ளன. ஸங்க்ரமணகாலத்தில் சக்கரத்தாழ்வார் தீர்த்தம் ப்ரஸாதிப்பர்; க்ரஹணகாலங்களிலும் இவ்வாறே, இதற்குக் காரணம் நித்ய புஷ்கரிணியின் தீர்த்த மகிமை.

பகலில் நான்கு நாச்சிமாருடன் ஆஸ்தானம்-திருப்பாவை சாற்றுமறை.

(17) கனு உத்ஸவம் - தைமாதம் இரண்டாம்தேதி நாச்சியார் கனு உத்ஸவம் கண்டருள்வர். இரவு பெருமாள் பாரிவேட்டைப் புறப்பாடு - பல்லக்கில்.

(18) ப்ரணய கலகம் (மட்டையடி)- காலையில் பெருமாள் பல்லக்கில் எழுந்தருள்வர். கோபுர வாசலில் கோஷ்டி தொடக்கம்; தனியன்கள் இல்லாமல்: நாச்சியார் திருமொழி, பெருமாள் திருமொழி, பெரியதிருமடல், திருமொழி எட்டாம் பத்து - மேளவாத்யமில்லாமல் திருவீதிப் புறப்பாடு-திருமங்கையாழ்வார், ஸந்நிதியில் பெருமாள் திருமண்டபம் கண்டருள்வர். அப்போது ஸேவை முடியும். பின்பு மேளவாத்யத்துடன் ஸந்நிதிக்குப் புறப்பாடு - ஸந்நிதியில் ப்ரணயகலக - ச்ரவணம்.

(19) பங்குனி உத்தரம்: பெருமாள் திருக்கைத்தலத்தில் நாச்சியார் ஸந்நிதிக்கு எழுந்தருளி-ஏகாஸநம். ஸேவை நாச்சியார் திருமொழி.

ஆழ்வார் ஆசாரியர்கள் அவதார உத்ஸவங்கள்

மாஸத்திருநக்ஷத்ரங்கள்.

(1) நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், எம்பெருமானார், மணவாள மாமுனிகள்

இவர்களுக்கு நாலாயிரம் ஸேவை : ஸேவாக்ரமம் - நம்மாழ்வார் உத்ஸவத்தில் - முதலாயிரம். பெரியதிருமொழி - ஐந்து நாட்கள். பின்பு ஆறுந் திருநாள் முதல் திருவாய்மொழி இரண்டு பத்தும் இயற்பாவில் இரண்டு பத்தும் - சாற்று மறையன்று திருவாய்மொழியோடு ஸ்வப்ரபந்தங்கள் சாற்றுமறை ஆகும். இதே க்ரமத்தில் மற்றை மூவருக்கும். எம்பெருமானார் ஸந்நிதியில் எம்பெருமானார் உத்ஸவம் ஸேவை. திருமங்கையாழ்வார் ஸந்நிதியில் அவதார தினத்தில் ஸேவை சாற்றுமறை.

மற்றை ஆழ்வார்கள் அல்லது ஆசாரியர்கள் அவதார உத்ஸவத்தில் ஸ்வப்ரபந்தமும் கோயில் திருவாய்மொழியும்.

அவதார உத்ஸவத்தன்று திருமங்கையாழ்வார், எம்பெருமானார், மணவாள மாமுனிகள் இவர்களுக்கு மாடவீதியில் அல்லது பெரியவீதியில் புறப்பாடு. காலையில் மங்களாசாஸனத்திற்கு ஆழ்வார் அல்லது ஆசாரியர் பெருமாள் ஸந்நிதிக்கு எழுந்தருளி ஸ்ரீசடகோபன், திருமாலை, பரியட்டம் பெறுவர். குலசேகரப்பெருமாள் அவதார உத்ஸவத்தில் முதலில் மங்களாசாஸநம் பெரிய ஸந்நிதியில் நடக்கும், பின்பு சக்ரவர்த்தித் திருமகன் ஸந்நிதியில் மங்களாசாஸநம் நடந்து அங்கேயே எழுந்தருளி ஸேவை சாற்றுமறை நடக்கும்.

கூரத்தாழ்வான் அவதார உத்ஸவம் ஸ்ரீஎம்பெருமானார் ஸந்நிதியில் நடக்கும், மாஸத் திருநக்ஷத்திரம் ஸேவாக்ரமம்.

(1) நம்மாழ்வார் – ஆழ்வார்கள் ஸந்நிதியில் - திருவிருத்தம்.

(2) திருமங்கையாழ்வார் - திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம்.

(3) ஆண்டாள்–ஆண்டாள் ஸந்நிதியில் திருப்பாவை, நாச்சியார் திருமொழி.

(4) பெரியாழ்வார்-ஆழ்வார்கள் ஸந்நிதியில் - பெரியாழ்வார் திருமொழி-பாதி-பாதியாக.

(5) குலசேகரப் பெருமாள்-பெருமாள் திருமொழி.

(6) எம்பெருமானார் - எம்பெருமானார் ஸந்நிதியில் - இராமானுச நூற்றந்தாதி.

(7) மணவாள மாமுனிகள்-ஆழ்வார்கள் ஸந்நிதியில் - உபதேசரத்தினமாலை

(8) அநத்யயந காலத்தில் இரண்டு வேளையும் உபதேசரத்தினமாலை ஸேவை - சாற்றுமறை.

**தீர்த்தக்காரர்களது கைங்கர்யங்கள்.**

(1) திவ்யப்ரபந்த ஸேவை - நித்ய நைமித்திக உத்ஸவங்களில்

(2) பெருமாள் ஸந்நிதி, நாச்சியார் ஸந்நிதி இவற்றின் இரவு திருவாராதனத்தின்போது வேதவிண்ணப்பம், அர்ச்சனை படனம்.

(3) திருத்துழாய் க்ரஹித்து ஸமர்ப்பிப்பது.

(4) திருமஞ்சனத்தின்போது புருஷஸூக்தம், ஸ்ரீஸூக்தம் முதலியன ஸேவிப்பது.